# போல் நல்லநாயகம் விடுதலை!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 18-7-86 வெள்ளி (ஆடி 2 துல்க 10) முழக்கம் 164

## அவரின் நேர்மையான பணிக்கு நீதிபதி விக்னராஜா பாராட்டு

கல்முனை பிரஜைகள்குழுத் தலைவர் திரு. போல் நல்லநாயகத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர் சகல குற்றச்சாட்டுகளிலும் சுற்றவாழியாகக் காணப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டார். கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு கே. விக்னராஜா இந்தத் தீர்ப்பை வழங்கினர். அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் தூண்டும் விதத்தில் காழ்ப்புணர்ச்சியையும், வெறுப்பையும் ஏற்படுத்தக் கூடியதாக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக திரு. நல்லநாயகத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. திரு. நல்லநாயகம் பிரஜைகள் குழுத் தலைவர் என்ற வகையில் தமது கடமையை தவருது செய்துள்ளார் என்பது சாட்சிகள் மூலம் நிரூபணமாகியுள்ளது என்று தெரிவித்த நீதிபதி, நற்பிட்டிமுனையில் இருபத்து மூன்றுபேர் கொல்லப்பட்டது தொடர்பாகவும், பல கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள் எரிக்கப்பட்டது —4ம் பக்கம் பார்க்க

★ நெடுங்கேணியில் நேற்றுக்காலை

# இ.போ.ச. பஸ் மீது ஹெலி குண்டு வீசி 13 பேர் மரணம்

(எட்வர்ட் லியோன்)

முல்லைத்தீவு - வவுனியா பிரதான வீதியில் நெடுங்கேணிக்கு அருகாமையிலுள்ள தண்டுவான் என்ற இடத்தில் நேற்றுக் காலை இ. போ. ச. பஸ் மீது ஹெலிகப்டர் ஒன்று மேற்கொண்ட குண்டு வீச்சினுல் பஸ்ஸின் சாரதி ட்பட பதின் மூன்று பேர் ஸ்தலத்திலேயே பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் படுகாயமுற்ற இருவர் நேற்றிரவு ஒன்பது மணியளவில் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

முல்லைத்தீவு டிப்போவிலிருந்து நேற்றுக்காலை வவுனியாவுக்குப் புறப்பட்ட முதல் பஸ்ஸே இந்தத் தாக்குதலுக்கு இலக்கானது

பஸ் திடீரென பழுதடைந்ததாகவும், சுமார் முப்பத்தைந்து பயணிகள் கீழே இறங்கி பஸ்ஸைத் தள்ளியபோது ஹெலிகப்டர் ஒன்று குண்டுகளை வீசியதாகவும் தப்பிவந்த பயணிகள் தெரிவித்தனர்.

பஸ் முற்ருக எரிந்து சேதத்துக்குள்ளானது. மரணமான சாரதி பாஷையூரைச் சேர்ந்த இம்மானுவேல் என்று தெரியவந்துள்ளது. மரணமான பன்னிரண்டு பயணிகளில் ஒருவர் பெண் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரனும் இதே பஸ்ஸின் பின்னுல் காரொன்றில் பயணம் செய் —4ஆம் பக்கம் பார்க்க

## ஆறு தினங்களில் 150 தமிழர் கொலை

கடந்த சனிக்கிழமை தமிழர் கூட்டணிப் பிரதிநிதிகள் —4ஆம் பக்கம் பார்க்க

## 60 நவீன கவச வண்டிகள் வடக்கு நோக்கி வருகின்றன

(வவுனியா)

நேற்றுக்காலை வவுனியாவிலிருந்து மாங்குளம் பக்கமாக அறுபது ராணுவ கவசவாகனங்கள் யாழ். வீதியால் வந்தன. ராணுவச் சிப்பாய்கள் நடந்தும் வாகனங்களிலும் வந்தனர். ராணுவ வாகனங்களுடன் லொறிகள், பவுசர்கள், ட்ரக், பீரங்கி பொருத்தப்பட்ட கவச வா தனங்கள் ஆகியவற்றுடன் இது வரையில் வடபகுதிக்கு வரா த புதிய ர க கவச வாகனங்கள் இரண்டும் காணப்பட்டன.

இந்த ராணுவ பவனியால் யாழ். வவுனியா வீதியில் போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன. ஓமந்தை ராணுவ முகாம்பகுதியை இந்த ராணுவ பவனி நேற்று சென்றடைந்தது.

## யாழ்தேவி ஞாயிறு முதல் வவுனியாவரையும் ஓடும்

வடபகுதிக்கான யாழ்தேவி ரயில் சேவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் வவுனியா வரையும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த ரயில் கோட்டையில் இருந்து தினமும் அதிகாலை புறப்பட்டு நண்பகல் 12 மணியளவில் வவுனியாவுக்கு வந்துசேரும். பின்னர் வவுனியாவில் இருந்து பகல் 2.40க்கு புறப்பட்டு இரவு 8.30 மணிக்கு கோட்டையை சென்றடையும்.

இதற்கு இணைப்பு சேவையாக பஸ் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தற்போது யாழ்தேவி சேவை அனுராதபுரம்வரை மட்டுமே நடைபெறுகிறது.

ஈ. பி. ஆர். எல். எவ். அறிவிப்பு

## வசாவிளான் தாக்குதலில் ஏழு இராணுவம் மரணம்

வசாவிளான் ராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியே வந்த ராணுவத்தினர்மீது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் மக்கள் விடுதலைப் படை — எதிர்த்தாக்குதலை மேற்கொண்டு அவர்களை மீண்டும் முகாமிற்குள் திருப்பியனுப்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலைப்படை வீரர்கள் "எஸ். எஸ். - 84" மோட்டார் தாக்குதல் மேற்கொண்டதில் ஏழு ராணுவச் சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும், சிலர் படுகாயமடைந்ததாகவும், இது தொடர்பாக ஈ.பி.ஆர்.எல். எவ். விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் மக்கள் விடுதலைப் படையினர் தரப்பில் எவ்வித இழப்பும் இல்லை எனவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூதூரில் 35 சடலங்கள் மீட்பு!

(திருமலை)

மூதூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமானவர்களில் முப்பத்தைந்து பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது மேலும் முப்பத்திரெண்டு பேரின் சடலங்கள் தெகிவத்தை ராணுவ முகாம் வீதியில் கிடப்பதாக கூறப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் முப்பத்தொரு பேர் அகதிகள் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுளளது. அதில் பதினெரு பேரின்சடலங்கள்தொடர்பாக நேற்று மரணவிசாரணை நடைபெற்றது. மரணமானவர்களின் ஐவர் பெண்கள். அகதிகள் இருந்த பாடசாலையும் எரிக்கப்பட்டுள்ளது.

மரணமானவர்களில் அடையாளம் காணப்பட்டவர்களின் விபரம் வருமாறு:-

மு. விநாயகம், இ. யோகன், சி. குணசிங்கம், வி. கனகநாயகம், பி. ஆலப்பிள்ளை, சி. அருணகிரி, க. வைரக்குட்டி, ஜெகன் சீ. பவன், வ. இராச —4ஆம் பக்கம் பார்க்க

ஐந்து இளைஞர் சூட்டுக்குப் பலி?

## பூநகரி பள்ளிக்குடாவில் திடீர் இராணுவ வேட்டை!

(குருநகர்)

நேற்றுக் காலை பதினெரு மணியளவில் பூநகரி பள்ளிக்குடாக் கிராமத்தை திடீரென சுற்றி வளைத்த முன்னூற்றுக்கும்அதிகமானராணுவத்தினர் நடத்திய துப்பாக்கி வேட்டு, குண்டு வெடிப்புச் சம்பவத்தால் பள்ளிக்குடாக் கிராமவசிகள் வீடுகளை விட்டுக் காட்டுப் பகுதிக்கு ஓடியதாகவும் ஐந்து இளைஞர் உட்பட பலர் கொல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

பள்ளிக்குடாவில் தங்கித் தொழில் செய்து வந்த குருநகர் மீனவர்களான பூராசா (45), இராஜன், (30) ஆகிய இருவரும் நேற்றுப் பிற்பகல் காட்டுப் பாதைகளூடாக நீண்ட தூரம் ஓடி வாகனம் —4-ம் பக்கம் பார்க்க

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிப்பு

## ஊர்காவற் படையை அழித்து ஆயுதங்களைக் கைப்பற்றுவோம்!

தமிழீழ விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாகி வரும் இக் காலகட்டத்தில் போராட்டத்தை மழுங்கடிக்க ஸ்ரீ லங்கா அரசு பல்வேறு சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இச்சதி முயற்சிகளின் ஓர் அங்கமாகவே ஊர்காவற்படை எனும் அமைப்பை உருவாக்கி வருகிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் குழு வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'எதற்காக இந்த ஊர்காவல்படை?' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இப் பிரசுரத்தில் மேலும் முக்கியமாகத் தெரிவிக்கப்படுவதாவது:-

அரசின் இச் சதிவலைக்குள் தமிழ் பேசும் சமூகத்திலிருந்து விடுபட்ட சில அநாகரீக கூட்டங்கள் வீழ்ந்து விடுகின்றன. இவ்வாறு வீழ்ந்துவிட்ட காடையர் கூட்டங்களே ஊர்காவற்படைகள் என சிங்கள அரசால் அழைக்கப்படுகிறது.

தமிழ் பேசும் தமிழ், முஸ் ...4ஆம் பக்கம் பார்க்க

## ராணுவ பாஸ் ரத்தாகும்!

கொழும்பு செல்லும் வாகனங்களுக்கு நடைமுறையிலிருக்கும் 'ராணுவ பாஸ்' திட் —4ஆம் பக்கம் பார்க்க

யாழ். மாவட்ட மாணவரின்

## ஜி.சி.ஈ. உயர்பரீட்சை அனுமதி பத்திரம் அனுப்பப்பட்டது

ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகும் ஜி சி. ஈ. உயர்தர பரீட்சைக்கான மாணவர் அனுமதிப் பத்திரங்கள் யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்தினுல் நேற்று யாழ். பிரதான தபாற்கந்தோரில் ஒப்படைக்கப்பட்டது.

தனிப்பட்ட, பாடசாலைப் பரீட்சார்த்திகள் இதனைத் தபால் மூலம் பெறுவர். பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள், மேலதிக மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், மேலதிகநோக்குநர்களுக்கான நியமனக் கடிதங்களும் நேற்றுதபால்கந்தோரில் —4-ம் பக்கம் பார்க்க

அன்னையர் முன்னணி ஏற்பாடு

# 24ம் திகதி கறுப்புக்கொடி தினம்; 25ல் கறுப்பு தினம்

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறையிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நடந்த தமிழர் படுகொலைகளை நினைவு கூருமுகமாகவும், இலங்கையில் தமிழருக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்முறைகளைக் கண்டிக்குமுகமாகவும் ஜூலை 25 ஆம் திகதியை கறுப்புதினமாக அனுஷ்டிப்பதற்கு அன்னையர் முன்னணியினர் முடிவு செய்துள்ளனர்.

அன்று அன்னையர் முன்னணி தனது கிளைகள் அமைந்துள்ள இடங்களில் கறுப்புத் தினத்தை அனுஷ்டிப்பதற்காகப் பொது இடங்களில் அமைதியான முறையில் ஒன்று கூட ஏற்பாடு செய்துள்ளது.

இக்கறுப்புத்தினத்தின் முதற் கட்டமாக ஜூலை 24 ஆம் திகதி வியாழக்கிழமை கறுப்புக் கொடித் தினமாக அனுஷ்டிக்கப்படும். அன்று சகலருக்கும் கறுப்புக் கொடிகளை அன்னையர் முன்னணி வழங்கும்.

இக் கறுப்புத்தின நிகழ்ச்சிகளுக்குப் பூரண ஆதரவு வழங்குமாறு பொதுமக்களை அன்னையர் முன்னணி வேண்டியுள்ளது.

## வடமராட்சி ஒளி பரப்பு

(வல்வெட்டித்துறை)

விடுதலைப் புலிகளினால் அவர்களது ஒளிபரப்பு சேவை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு எட்டு மணி தொடக்கம் நெல்லியடிப் பகுதிகளுக்கும், திங்கட்கிழமைகளில் இரவு ஏழு மணி தொடக்கம் வல்வெட்டித்துறைப் பகுதிகளுக்கும் நடைபெறும்.

## புதிய உதவி அரச அதிபர்கள்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபராக, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு. தாமோதரம்பிள்ளை சந்திரசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார். வேலணை உதவி அரசாங்க அதிபராக கடந்த இரு வருடங்களாக கடமையாற்றிய செல்வி மைதிலி சோமசுந்தரம் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாக உத்தியோகஸ்தராக கடமையாற்றிய திரு. துரையப்பா, அரியரத்தினம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். இந்த இடமாற்றங்கள் யாவும் இம்மாதம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது,

## திருட்டு

( வேலணை )

காவலூர் பட்டணத்தின் கடற்கரையருகே உள்ள கடை ஒன்றினுள் இரவு நேரத்தில் திருடர்கள் புகுந்து பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்று விட்டார்கள்.

இத்திருட்டு சம்பந்தமான புகாரொன்று இளைஞர் கோஷ்டியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் மேற்கொள்ளும் துப்பாக்கி, ஷெல், பீரங்கி தாக்குதல்களுக்கு அஞ்சி வியாபார ஸ்தலங்களின் உரிமையாளர்கள் வேறு இடங்களில் உறங்கச் செல்வதனால் இதனைப் பயன்படுத்தியே திருட்டுக் கோஷ்டியொன்று இச் செயலைச் செய்துள்ளது. அண்மைக் காலங்களாக ஆட்கள் இல்லாத நேரம் பார்த்து வீடுகளிலும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் அறியப்படுகிறது.

## புதிய அதிபராக நியமனம்

(அச்சுவேலி)

ஆவரங்கால் ஸ்ரீ நமராசி இராமலிங்க வித்தியாசாலையின் புதிய அதிபராக திரு. எஸ் கதிர்காமத்தம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

இடைக்காடு மகாவித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு அதிபராக கடமையாற்றிய திரு. கதிர்காமத்தம்பி இலங்கை கல்விச்சேவை ஐந்தாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்று இரண்டாம் தர அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

## குருபூர்ணிமா தின நிகழ்ச்சி

(கல்வியங்காடு)

திருநெல்வேலி தெற்கு சேர். பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியில் 20ந்திகதி ஞாயிற்றுக்கிழமையும், 21ம் திகதி திங்கட்கிழமையும் குரு பூர்ணிமா தினம் கொண்டாடப்படவுள்ளது.

## நிர்வாகிகள்

(புலோலி)

செம்பியன்பற்று — முள்ளிப்பற்று கிராமசபைப் பகுதிகளுக்குட்பட்ட வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் உபதலைவர்: திரு. ந. தர்மகுலசிங்கம், செயலாளர்: திரு. க.ஜெயவீரசிங்கம், பொருளாளர்; திரு. த. நாகேஸ்வரன், செயற்குழு உறுப்பினர்கள்; திரு. ஞே. மதுரநாயகம், திரு. வெ. இராசநாயகம், திரு. வீ. எஸ். கந்தசாமி, திரு. ந. திருபாலசிங்கம், திரு. க. கறுவல்தம்பி.

## சாவகச்சேரி வென்றது

( சாவகச்சேரி )

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பதினைந்து வயதிற்குட்பட்டோருக்கும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பதினைந்து வயதுக்குட்பட்டோருக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில், சாவகச்சேரி இந்துக்கல்லூரி 7:0 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

யாழ். கல்விப்பகுதியினரால் நடத்தப்பட்ட இந்த உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு திரு வாமதேவன் மத்தியஸ்தம் வகித்தார்.


அனைத்து கிறிஸ்தவர்கள் கூடும்

ஐக்கிய ஜெபம்

1986 ஜூலை 19ம் திகதி

காலை 9.00 மணி முதல் பிற்பகல்

2.00 மணி வரை

பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில்

நடக்கவிருக்கின்றது.

ஜெப சேவை

R/24059


## பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(புலோலி)

பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளுக்கிடையேயானதும், புலோலி கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயானதுமான பண்ணிசைப்போட்டி தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள சங்கீதக் கல்வியதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இப் பண்ணிசைப் போட்டிகளை சைவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். சிவஞானசுந்தரம் ஆரம்பித்து வைத்தார். போட்டியில் வெற்றியீட்டியோர் விபரப் பின்வருமாறு:

புலோலி கொத்தணிப் பாடசாலைகள் மேற்பிரிவு: பெண்கள் பகுதி:

செல்வி க. வல்லவாம்பிகை வட-இந்து மகளிர் கல்லூரி, ஆண்கள் பகுதி: செல்வன் இ. பிரபாகரன், வேலாயுதம் மகா வித்தியாலயம், மத்தியபிரிவு பெண்கள் பகுதி: செல்வி த. சிவப்பிரசாந்தி புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, ஆண்கள் பகுதி: செல்வன் வி. கிருஷ்ணகாந்தன் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலம். கீழ்ப் பிரிவு பெண்கள் பகுதி: செல்வி பா. அபிராமி தம்பசெட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, ஆண்கள் பகுதி: செல்வன் பி.பிரணவன் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, ஆரம்ப பிரிவு: பெண்கள் பகுதி செல்வி பா. பாக்கியலட்சுமி தம்பசெட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, ஆரம்ப பிரிவு தனி: செல்வன் த. கார்த்திபன் தம்பசெட்டி மெதடிஸ்தமிஷன் பாடசாலை.

பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகள் அதிமேற்பிரிவு பெண்கள் பகுதி: செல்வி யோ. துரைராசா மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி, மத்திய பிரிவு பெண்கள் பகுதி செல்வி கே. கலாதேவி தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயம் கீழ்ப் பிரிவு பெண்கள் பகுதி: செல்வி தி. தீபஜ அல்வாய் அம்பாள் வித்தியாலயம், ஆரம்ப பிரிவு ஆண்கள் பகுதி: செல்வன் கு. குணஜீவன், வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை பெண்கள் பகுதி: செல்வி இ. விஜிதா வதிரி வடக்கு மெதடிஸ்தமிஷன் பாடசாலை, பாலர் பிரிவு பெண்கள் பகுதி: செல்வி எஸ். கார்த்திகா தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயம், ஆண்கள்பகுதி: செல்வன் ம. நிரோகன் வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை.

## இங்கே உச்சநிலை அச்சம்

(வேலணை)

காவலூர் பட்டணத்தில் வேலைபார்க்கும் அரச அலுவலர்கள் யாவரும் மரண பயத்தின் மத்தியிலே தமது கடமைகளைப் பார்த்து வருகிறார்கள். மாவட்டநீதிமன்றம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி தபால் அலுவலகம், பிரதான கல்லூரிகள், மற்றும் பல அரச அலுவலகங்கள் யாவும் பட்டணத்தில் கரையோரப்பகுதியில் அமைந்துள்ளதனால் படையினரின் தாக்குதல்கள் நடைபெறும் வேளையில் இவ் அலுவலக ஊழியர்கள் மரணபயத்துடனேயே வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. முன்பு இவ்வலுவலகங்கள் யாவும் கடற்கரையோரத்திலே அமைந்திருந்து. பின்னர் தற்போதும் படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகும் இடங்களிலேயே மாற்றப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## பூநகரி சனசமூக நிலைய ஒன்றியம்

(பூநகரி)

பூநகரி உப அலுவலகத்திற்கு உட்பட்ட சன சமூக நிலையங்களுக்கான ஒன்றியக் கூட்டம் யாழ். அபி. சபை பூநகரி உப அலுவலகத்தில் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. விஜயநாதன் தலைமையில் இடம் பெற்றது.

பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் வ. அரியரத்தினம், செயலாளர் சு. உலகநாதன், பொருளாளர் இரா. செல்வராசா ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக கி. துரைசிங்கம், வே. பாலசுப்பிரமணியம். வை.தட்சணாமூர்த்தி, அ. நாகராசா ஆகியோரும் தெரிவாகினர்.

## மீண்டும் விநியோகம்

(வேலணை)

கடந்த சில மாதங்களாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆகியவர்களுக்கான போஷாக் குணவுகள், இலைப்பாற்கஞ்சி, திரிபோஷ உணவு என்பன மீண்டும் வேலணைப்பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இவற்றை உலக குழந்தைகள் நிறுவனம், சர்வோதயம், றெட்பஞு போன்ற சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. வேலணையைச் சேர்ந்த சமூக சேவகி திருமதி தி. பத்மாவதி ஆசிரியையின் முயற்சியினாலேயே இவை இங்கு வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## புதிய புத்தகம்

(சாவகச்சேரி)

ஏழாம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய சமூகக் கல்விப் பாடப் புத்தகம் ஒன்றை, குரும்பசிட்டி அம்பிகா கல்விச் சேவையினர் வெளியிட்டுள்ளனர்.

வலய ஆசிரிய சமூகக் கல்வி ஆலோசகர் திரு. சி. நடராஜாவின் ஆலோசனையுடன் வெளியிடப்பட்ட இப்புதிய சமூகக் கல்விப் புத்தகத்தை யாழ். குடாநாட்டில் பாடசாலைகள் தோறும் மாணவர் பெரிதளவு பயன்படுத்தி வருகிறார்கள்.

## கற்கள் குவித்தும் பயனில்லையே

(அச்சுவேலி)

புத்தூர் சுன்னாகம் வீதி புதுப் பொலிவு பெறுமா? என்ற சந்தேகம் அந்த வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

புத்தூர்- சுன்னாகம் வீதியில் காணப்படும் பெரிய குழிகளைத் திருத்துவதற்கு சுன்னாகத்தில் இருந்து அச்செழுவரை கற்கள் சேகரித்து வைக்கப் பட்டுள்ளன.

சேகரித்து வைக்கப்பட்டுள்ள கற்கள் பல மாதங்களாக குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப் படாமல் சிதைவடைந்த நிலையில் உள்ளன.

"தார்" இல்லாத படியால் குறிப்பிட்டபடி திருத்த வேலைகள் ஆரம்பிக்க முடியவில்லை என வீதித் திருத்த வேலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் கூறியதாகப் பேசப்படுகின்றது.

ஆனால் தார் வந்து சேரும் போது கற்கள் இல்லாமல் போய்விடக் கூடிய நிலையில் இருப்பதால் வீதி புதுப் பொலிவு பெறுமா என பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## பிறந்த நாள் வாழ்த்து

அல்லாரை தெற்கு, கந்தசாமி இராசேஸ்வரி தம்பதியின் மகள் துஷாயினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## வீதி திருத்தம் வீண் தாமதம்

(சங்கானை)

சங்கானை — வல்லை வீதி, மல்லாகம் வீதி, தொட்டிலடி வீதி, சண்டிலிப்பாய் வீதி ஆகியன பல வருடங்களாக சேதப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

பலமுறை வலியுறுத்தியும் வீதிகளில் உரிய திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மேற்படி வீதிகளில் பஸ் சேவை, மினிபஸ் சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் வீதிகளை நேரில்சென்று பார்வையிட்டு நடவடிக்கைகளை தொடர முன்வர வேண்டும் என பலரும் விரும்புகிறார்கள்.

## அவற்றின் தலைவிதி அப்படி

(சுன்னாகம்)

வசாவிளான் முகாமையண்டியுள்ள பகுதிகளில் மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்படும் ஆடு, மாடுகள் வகை தொகையின்றிச் சுட்டுக்கொல்லப்படுவதுடன், உயிருடனும் பிடித்துக்கட்டிவைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேய்ந்து பழகிவிட்டகாரணத்தால் அவிழ்த்துவிடப்படும் மந்தைகள் முகாமுக்கு அருகேவருவதால் தினமும் உயிர்ப்பலி நிகழ்ச்சி நடந்த வண்ணமிருக்கின்றன. இராணுவத்தினரின் கண்களில் தென்பட்டனவற்றை தடுக்கவும் முடியாத நிலையினால் அவற்றை இழக்கநேரிடுகிறது.

## நிர்வாகிகள்

(வண்ணார்பண்ணை)

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: வே. மார்க்கண்டு, துணைத்தலைவர்கள்: எஸ். நடராஜா, மு. தர்மதாசன், செயலாளர்: எஸ்.மனோகரன், உதவி செயலாளர்கள்: ஏ. ஞானச்சந்திரன், ஆர். சந்திரகுமார், பொருளாளர்: எஸ். யே. செல்லத்துரை, உள்ளகக் கணக்காளர்: ஏ. பி. அருணாசலம்.

மேலும் பதின்மூன்று பிரதிநிதிகள், பதின்மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


வெற்றிடம்

தரமான நவீன உடைகள் அலங்காரமாக தைப்பதற்கு அனுபவம் வாய்ந்த தையல்காரர் வேண்டப்படுகின்றனர். நியாயமான வேதனம் வழங்கப்படும். 20.7.86க்கு முன்பு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

M.குமாரவேல் J.P.

புகையிரத

வீதிக்கருகாமையில்,

பளை.

R/24062

உதய சிந்தனை

ஒருவன் தன் மனத்தில் குற்றமில்லாதவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே, மறத் தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.

—திருக்குறள்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 22437

இதய ஒலி

18-7-86 வெள்ளிக்கிழமை (அக்ஷய) ஆடி 2

# ஜனாதிபதி அதிர்ச்சி; நம்பமுடியவில்லையே!

கிளிநொச்சியிலிருந்து வெளியேறி அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் மக்களுக்கு அரசாங்கம் எந்த விதமான உதவியும் வழங்க மறுக்கும் 'தர்மம்' பற்றி இங்கு நேற்றுக் குறிப்பிட்டிருந்தோம்.

இராணுவத்தினரின் அத்துமீறிய செயல்களாலும், அட்டூழியங்களாலுமே இவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற நேர்ந்ததை அரசாங்கமே அறியும்.

ஆனால் பயங்கரவாதிகளுக்குப் பயந்து கிளிநொச்சி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும், இவர்கள் இருக்கும் இடங்கள் பற்றிய விபரங்கள் சரியாகப் பெறமுடியாததால் அரசாங்கம் உதவி வழங்க முடியாதிருப்பதாகவும் வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கிளிநொச்சியிலிருந்து வெளியேறியவர்களை உடனடியாக பழைய இடத்துக்குத் திரும்புமாறும், அவ்வாறு திரும்பியதும் சகல உதவிகளும் வழங்கப்படுமென்றும் இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவாரமும் கிளிநொச்சியில் இராணுவச் சூட்டுக்குப் பொதுமக்களில் நால்வர் பலியானதை அனைவரும் அறிவர்.

அரசாங்க அதிகாரிகளே தமது வேலைகளைக் கவனிக்கக் கிளிநொச்சி செல்லமுடியாதிருக்கும் நிலையில், அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகும் மக்களை மீண்டும் அங்கு செல்லுமாறு கோருவது எந்த வகையிலும் நியாயமாகாது.

"நிவாரணம் தருகிறோம்; இலவச அரிசி, மா, சீனி தருகிறோம்" என்று பசப்பு வார்த்தை கூறி அழைப்பவர்கள் உண்மையாகவே அவர்களை அகதிகளாகக் கருதி உதவி செய்ய விரும்பினால் அவர்கள் தற்போது இருக்கும் இடங்களிலேயே உதவி வழங்க முடியாதா?

"அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கமுடியவில்லை" என்று அரசாங்கம் சொல்லமுடியாது.

இதனை வெறும் நொண்டிச் சாட்டாகவே எடுக்கவேண்டும்.

கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் தற்போது தங்கியிருக்கும் கிராமசேவகரிடம் தமது விபரங்களை அறிவிக்குமாறு கேட்கப்பட்டால் இரண்டு தினங்களில் முழு விபரங்களையும் பெற முடியுமென்பதை நாம் சொல்லித்தான் அரசாங்கத்துக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை.

தமிழ்க் கிராமங்களைத் தேடிக் கண்பிடித்து மக்களைக் கொலை செய்யும் அரசாங்க படைகளுக்கு, கிளிநொச்சித் தமிழ் மக்களைப் பலிக்கடாக்களாக்கத்தான் அரசாங்கம் முயலுகிறதே தவிர உதவி செய்து பாதுகாப்பு வழங்க முனையவில்லை.

கிளிநொச்சி என்ற கொலைக் களத்துக்கு மக்களை அனுப்பி வைக்க எடுக்கும் முயற்சிக்கு "நிவாரண உதவி" என்ற ஆசையைக் காட்டி மக்களை இழுக்க முயற்சி நடக்கிறது.

மன்னாரிலுள்ள அடம்பனிலும், மூதூரிலுள்ள தமிழ்க் கிராமங்களிலும் இவ்வாரம் தேடுதல் வேட்டை என்ற பெயரில் எத்தனை அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

வெட்டியும், சுட்டும், நெருப்பில் பொசுக்கியும், வரிசையில் நிறுத்தி துப்பாக்கிக்கு இரையாக்கியும் தமிழர்களைக் கொலை செய்வதில் இராணுவப் படைகள் இன்பம் அனுபவிக்கின்றன.

கொலை செய்யப்படுபவர்கள் எல்லாம் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டப்படுவதுடன் நியாயம், நீதி என்பதெல்லாம் முடிந்து விடுகின்றது.

அடம்பனில் அப்பாவிக் கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று கூட்டணிப் பிரமுகர்கள் சுட்டிக் காட்டிய போது, "இல்லை; அவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள்" என்று அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

பெரும் தொகையான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக கூட்டணியினர் ஜனாதிபதியிடம் போதிய ஆதாரங்களுடன் எடுத்துக் கூறியபோது, அவர் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் ஜனாதிபதிக்கு வடக்கு கிழக்கில் இடம்பெறும் "இராணுவ ஆட்சி"யின் பலாபலன்கள் இதுவரை தெரியாதா?

அல்லது தெரியாததுபோல அவர் நடந்து கொள்கிறாரா?

கூட்டணியினர் பேச்சுவார்த்தைக்குக் கொழும்புக்கு வந்த பின்னர் வடக்கு கிழக்கில் சுமார் நூற்றைம்பதுக்கும் அதிகமான அப்பாவி மக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்பதையாவது ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவது நல்லது.

## பாகிஸ்தானுக்கு ரீகன் எச்சரிக்கை:

# அணுகுண்டு தயாரித்தால் உதவிகள் நிறுத்தப்படும்!

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டால் பாகிஸ்தானுக்கான தனது இராணுவ மற்றும் பொருளாதார உதவிகள் நிறுத்தப்படுமென அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த எச்சரிக்கையை தற்போது அமெரிக்க விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதம மந்திரி திரு. ஜுனெஜோவிடம் ஜனாதிபதி திரு ரொனுல்ட் ரீகன் வெளிப்படையாக வெளியிட்டார்.

திரு. ரீகனும், திரு ஜுனெஜோவும் ஒரு மணித்தியாலமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

வெள்ளை மாளிகையில் முன்னதாக திரு. ஜுனெஜோவை அவர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றார்.

பாகிஸ்தானுக்கான இராணுவ பொருளாதார உதவிகளை அமெரிக்கா வழங்கும் என்று திரு. ரீகன் பாகிஸ்தான் பிரதம மந்திரிக்கு உறுதியளித்தார்.

## குஜராத் குழப்பம்

# சமரஸ முயற்சிக்கு ராஜீவ் சிதம்பரத்தை அனுப்பினார்

(புதுடில்லி)

பெரும் கலவரங்களை இந்து-முஸ்லிம் மக்களுக்கிடையே ஏற்படுத்திய குஜராத் மாநிலத்துக்கு சமாதான முயற்சியின் பொருட்டு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மத்திய இணையமைச்சர் திரு. பி. சிவசிதம்பரத்தை அனுப்பி வைத்ததன் மூலம் தமிழரான அவர் மீதுள்ள அதீத நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குஜராத் சென்று நிலையை நேரில் ஆராய்ந்த திரு. சிதம்பரம் மாநிலத்தில் அமைதி பேணுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

வகுப்புவாதத்தைக் கண்டித்த அவர் வன்முறைகளை அரசு கடும் போக்கைக் கையாண்டு ஒடுக்கும் என்றும் சொன்னார்.

# இது சென்னை தகவல்

(சென்னை)

காணிக்குடியேற்றம் சம்பந்தமான சில யோசனைகளில் மாற்றம் செய்ய இலங்கை அரசு இணங்கியுள்ளதாகவும் காணி, காணி அபிவிருத்தி, மகாவலித்திட்ட மந்திரி திரு. காமினி திஸநாயகாவுடன் கூட்டணி இருமணி நேரச் சந்திப்பு நடத்தியதாகவும் சம்பாஷணை தொடரும் என்றும் நேற்று சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

## தட்சரின் இறுக்கமான போக்கு அவருக்கு இறக்கமாகுமா?

# தென்னாபிரிக்க விவகாரத்தினால் அவரது மந்திரிசபைக்குள் கருத்து வேறுபாடு

(லண்டன்)

தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரெட் தட்சர் அலட்சியப்படுத்தி வருவதால் அவரது மந்திரி சபைக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பிரதமரின் இப்போக்கு காமன்வெல்த் அமைப்புக்குள் பிளவை ஏற்படுத்தி விடும் என எலிஸபெத் மகாராணியார் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி தட்சரின் மந்திரி சபையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மேற்படி பொருளாதாரத்தடை விதிப்பை ஆதரிக்கும் வகையில் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆயினும் திருமதி தட்சர் தனது நிலையில் தொடர்ந்து இறுக்கமாகவே இருப்பதாக அரசியல் விமர்ஸகர்கள் கருதுகின்றனர்.

## ரஷ்ய வெளியுறவு மந்திரி தகவல்

# அமெரிக்காவுடனான பேச்சு தொடர்ந்து நடைபெறும்

(லண்டன்)

"அமெரிக்காவின் இசைவுடன் அணுவாயுதப் பரிகரணப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்படும்" என்று தற்போது பிரிட்டிஷ் விஜயம் மேற்கொண்டுள்ள சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. செர்னாட்சேவ் தெரிவித்துள்ளார்.

ஸோல்ட் -2 உடன்பாடு தொடர்பாகவும் ஆலோசிக்கப் படும் என்று குறிப்பிட்டார் அவர்.

அமெரிக்க, சோவியத் தலைவர்களுக்கிடையிலான உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் இம்மாதம் 25ம் திகதி ஆரம்பமாகும் என்றும் அவர் சொன்னார்.

# ராஜீவ் கொதிப்பு

(புதுடில்லி)

"ஏற்கனவே பிடிபட்ட பயங்கரவாதிகள் மூலம் அவர்களுடன் பாகிஸ்தானுக்குச் சம்பந்தமுள்ளது என்பதற்கு நிறைய சான்றுகள் கிடைத்துள்ளன" என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

"இது தொடர்பான விபரங்களை இப்போது வெளியிடுவது உகந்ததல்ல எனக் கூறிய அவர், பாகிஸ்தானில் பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி முகாம்கள் உள்ளன என்று முறையிட்டோம்; ஆனால் இல்லை என்கிறார் பாகிஸ்தான் ஜனாதிபதி என்றும் குறிப்பிட்டார்.

# நிராகரிப்பு

(பீக்கிங்)

பாரத எல்லைக்குள் தமது நாட்டவர் ஊடுருவல் செய்துள்ளனர் என்ற முறையீட்டை சீனா நிராகரித்துள்ளது.

# நியமனம்

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக திரு. பி. மோகனரங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மலேஷியாவும் மறுப்பு

(புதுடில்லி)

காமென்வெல்த் விளையாட்டு விழாவில் தானும் கலந்து கொள்ளப் போவதில்லை என்று மலேஷியாவும் அறிவித்துள்ளது.

# 'குருபக்தி அவசியம்'

(யாழ்ப்பாணம்)

"மாணவர்கள் குருபக்தி உள்ளவர்களாகத் திகழ வேண்டும்" என யாழ். இளையதம்பி இந்து வித்தியாலய மணிவாசகர் குருபூசை விழாவில் அதிபர் திரு. கா. கணேஸதாஸன் குறிப்பிட்டார்.

"மாதா பிதா குரு தெய்வம்" "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்: தாரமும் குருவும் தலைவிதிப்பயன்" போன்ற நல்வார்தைகளிலிருந்து குருவை அவர்கள் எப்படி மதித்துள்ளனர் என்பது புலனாகின்றது. இறைவனும் குருவடிவில் தோன்றியே மணிவாசகருக்கு ஞானத்தைப் போதித்தார் என்பதிலிருந்து குருவின் மகாத்மியம் தெளிவாகிறது. இதனை நன்குணர்ந்து ஆசிரியர்களும் பண்புள்ளவர்களாகவும், சேவை மனப்பான்மை உள்ளவர்களாகவும் மாணவர்களை வழி நடத்த வேண்டும். நற்பண்புகள் இல்லாத ஆசிரியர்கள் மாணவர்களை நல் வழிப்படுத்த முடியாது" என்றும் அவர் சொன்னார்.

யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் செல்வி கே. சரஸ்வதி ஆசிரியை தலைமையில் இவ் விழா நிகழ்ந்தது. பழைய மாணவி செல்வி.சோ. நளினியின் இன்னிசை நிகழ்ச்சியும் செல்வி. ஜி. மனோகரியின் சங்கீத கதாப்பிரசங்கமும் நடைபெற்றன. மாணவி சி. சுதர்சினி நன்றி கூறினார்.

ஈழமுரசு

# ஷெல் அடியால் சிறுமி பலி! மூவர் படுகாயமுற்றனர்

(புலோலி)

நேற்றுமுன்தினம் பருத்தித்துறை கூட்டுபாதுகாப்பு முகாமிலிருந்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் ஷெல் தாக்குதல்களினுல் முனையைச் சேர்ந்த மூன்று வயதுச்சிறுமி றெசித்தா பலியானுர். அவரதுதாயாரும் சகோதரியும் மூதாட்டி ஒருவரும் காயங்களுக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீட்டில் விழுந்துவெடித்த குண்டுகள் அமிர்தநாயகம் – செபமாலைநாயகி (வயது25) அமிர்தநாயகம் றெசிதா (வயது 3 மாதம்) மார்க்கு அன்னம்மா (வயது70) ஆகிய மூவரையும் படுகாயங்களுக்குள்ளாக்கியது.

பல்கலைக்கழக மாணவர் அவை அறிக்கை:

# மாகாண சபை அமெரிக்காவினதும் சிங்கள அரசினதும் நலன்களையே பேணும்

மாகாணசபைத் திட்டம் உண்மையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் சிங்களபேரினவாத அரசினதும் நலன்களைப் பேணுவதற்கான ஓர் நடவடிக்கையேயாகும். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் தமது அரசியலுக்கு எவ்வித வாய்ப்புமே கிடைக்காது என்ற நிலையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இத் தீர்வினூடாக தமது நலன்களை அடைந்து கொள்வதற்காக தீர்வு மார்க்கம் குறித்து பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளனர்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை "யாருக்காக இந்த தீர்வு?" என்ற தலைப்பில் மாகாண சபைத்திட்டம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்தெரிவித்துள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் முக்கியமாகத் தெரிவிக்கப்படுவதாவது:-

எமது பிரச்சினைக்கான தீர்வு என்பது மொத்தத்தமிழ்பேசும் மக்களின்நலன்களை அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிக்கப்படவேண்டும். தமிழ் பேசும் மக்களுக்கென பொதுப் பிரதேசமுண்டு. அதுமறுக்கப்பட்டு வடக்கு-கிழக்கு என இரு பிரிவாக எமது பிரதேசம்பிரிவுறும் போது தமிழ் பேசும் மக்களின் தேசிய ஒருங்கிணைப்பு சிதறடிக்கப்படுகிறது. இதனுல் நாம் தேசிய இனம் எனும் தகமையினை காலப்போக்கில் இழந்து விடுவதுடன் எம்மை முழுமையாக அழிப்பதற்கு வழிகோலியவர்களாவோம்.

தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் தேசிய வடிவத்தினூடாகவே எதிர்நோக்கப்படுபவையாகும். எனவே தேசிய வடிவத்தில் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்கமுடியும்.

தேசிய விடுதலைப்போராட்டமானது ஒரு கட்டத்தில் மேல்தட்டு மக்கள் சிலரின் நலன் கருதி சமரசத்தினை நோக்கி திசை திருப்பப்படுவது வரலாற்று உண்மை. இத்தகைய சமரசங்களினுல் மேல் தட்டினர் தமது நலன்களை அடைந்து கொள்வர். இதன்வெளிப்பாடே இன்றைய திட்டமாகும்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் எதுவுமே மாகாண சபைகள் ஊடாகத் தீர்க்கப்படப்போவதில்லை. மாறுக தமிழ் பேசும்மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கான சதி நடவடிக்கையே இதுவாகும். எனவே இத்திட்டத்தை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி நிராகரிப்போம் என இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவுப்பொருள் விலைகள் குறைப்பதற்கு ஆலோசனை

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் உணவுப் பொருட்களின் விலை ஏற்றம், எரிபொருள் தட்டுப்பாடு என்பன பற்றி ஆராய யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

குடாநாட்டிலுள்ள இருபத்திரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்களின் பிரதிநிதிகள் உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம், உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு. ரீ. மார்க்கண்டு ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் உணவுப் பொருட்களின் விலைஅதிகரிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அதன் விலை ஏற்றம் என்பன பற்றியும், அவற்றை வியாபாரிகள் அதிக விலைக்கு விற்பதன் காரணங்களையும் வர்த்தகப் பிரதிநிதிகள் அதிகாரிகளிடம் விரிவாகஎடுத்துக்கூறினர்.

குறிப்பாக லொறிகள் தடைமுகாம்களுக்கு முன்பாக செல்லும்போதுபொருட்கள்இறக்கி ஏற்றப்படும்போது ஏற்படும் செலவீனங்கள் மற்றும் சில கெடுபிடிகளினுலே இவ்வாறு பொருட்களின் விலை அதிகரிக்க வேண்டியதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

இங்கிருந்து போக்குவரவுகள் செய்ய முடியாத படியால் கப்பல் மூலமாக சில உணவுப் பொருட்களை இங்கு எடுப்பிக்கவும் இங்கிருந்து அனுப்பி வைக்கவும் ஒழுங்குசெய்துதருமாறும் வர்த்தகர்கள் அரசாங்க அதிபரிடம் கேட்டுக்கொண்டனர்.

இதற்கேற்ப விரைவில் வட பகுதிக்கான போக்குவரத்துக்கள் சீராக இயங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆறு வடமராட்சி இளைஞர் வவுனியா தடுப்பு முகாமில்

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாடு செல்வதற்காகக் கொழும்புக்கு பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த ஆறு இளைஞர்கள் வவுனியாவுக்கு அருகில் உள்ள தடைமுகாமில் வைத்து கைதுசெய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை, இன்பருட்டி ஆகிய பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞர்கள் கடந்த திங்கட்கிழமை பயணம் செய்யும்போது இது இடம் பெற்றது. இவர்களை அழைத்துச்சென்ற ஏஜன்ஸி இவர்களின் வெளிநாட்டுப் பயணம் பற்றி எடுத்துக் கூறியும், அவரையும் தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### ஆடிமாத பென்ஷன் திகதிகள்

இலங்கை வங்கிக் கச்சேரிக் கிளையில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்குரிய ஆடிமாதத்திற்குரிய ஒய்வூதியக் கொடுப்பனவுகள் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் கோட்டைக் கொடுப்பனவுக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை சிவில் ஒய்வூதியம் பெறுவோர் சகலருக்கும் இவ் ஒய்வூதியம் வழங்கப்படும். நாளை மறுதினம் விதவைகள், அனுதைகள், ஆசிரியர், ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், அவர்களின் விதவைகள் ஆகிய மற்றையோருக்கான ஒய்வூதியம் வழங்கப்படும்.

### இரண்டாம் நாளிலேயே இப்படியென்றுல்

நேற்றையதினம் காலை பத்தரைமணியளவில் கோட்டைக்கருகேயுள்ள பொலிஸாரின் தங்கு விடுதியிலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனுல் தொலைதொடர்புத்திணைக்களத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த ஊழியர்களிடையே பதற்றம் நிலவியது.

துப்பாக்கிவேட்டுச் சத்தத்தால் பீதியடைந்த சிலர் உடனடியாக அலுவலகத்தை விட்டு வெளியேறினர் எனக் கூறப்படுகின்றது. சுமார் இரண்டுமாதம் வரை இவ்வித சம்பவங்களால் வேலைக்குச் செல்லாதிருந்த ஊழியர், இராணுவமேலதிகாரிகளால் வழங்கப்பட்ட உறுதிமொழியின் பேரிலேயே நேற்றுமுன்தினம் வேலைக்குத் திரும்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இ. பொ. ச...

ததாகவும், ஆனுல் காயமெதுவுமின்றி அவர் தப்பியதாகவும் இதே பஸ்ஸில் பயணம்செய்து தப்பிய பயணி ஒருவர் தெரிவித்தார். காயமுற்றபலரை இவர் தமது காரில் முல்லைத்தீவு கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இரவு பத்துமணிக்குப் பின்னர் மேலும் எட்டுப்பேர் காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர். இவர்களில் ராஸீக் என்பவர் மரணமானுர்.

போல்...

தொடர்பாகவும் விசேட பாதுகாப்புப் படையின் மீது வழக்குத் தாக்கல் செய்ய முடியுமென்றும், அதற்கு ஆதாரங்கள் உண்டென்றும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

ஆறு தினங்களில் ..

கொழும்புக்கு வந்த பின்னர் நூற்றைம்பதுக்கும் அதிகமான தமிழர்கள் ஆயுதப் படையினரால் கொலை செய்யப்பட்டுள்ளதாக திரு. அமிர்தலிங்கம் ஜனுதிபதி ஜெயவர்த்தனுவிடம் புகார் செய்துள்ளார். மூதூர் படுகொலைகள் பற்றி விசாரணை நடத்த ஜனுதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இராணுவ பாஸ்...

டம் ரத்துச் செய்யப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. அநேகமாக அடுத்த வார முற்பகுதியில் இது ரத்தாகலாம். லொறி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளை அமைச்சர் அத்துலத் முதலி திங்கட்கிழமை சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற் ...

லிம், மலையக மக்களை முறியடித்து தன் நிரந்தர அடிமையாக்க சிங்கள அரசு இம் மூன்று சமூகங்களிடையேயும் இச் சதி வலையைப் பாவிக்கிறது.

உயரிய முஸ்லிம் சமூகத்திலிருந்து விடுபட்ட ஓர் சில இளைஞர்கள் ஊர்காவற்படை என்று கூறிக் கொண்டு எதிரிக்குத் துணை போய் தன் இனத்திற்கே 'கோடரிக் காம்பாக' அமைவது எமக்கு மனவேதனை அளிப்பதோடு அனுமதிக்கப்பட முடியாததாகும்.

இவ் ஊர்காவல்படையால் தமிழீழ மக்கள் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர். மானபங்கப்படுத்தப்படுகின்றனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டு விரட்டியடிக்கப்படுகின்றனர். எம் எதிரிக்கு ஒப்பாக அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் இப்பயங்கரவாதச் செயல்களைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாத சூழ்நிலையே நிலவுகிறது.

அரச கூலிப்படைகளின் துப்பாக்கிகள் அனைத்தும் என்ருே ஒரு நாள் தமிழீழ மக்களுக்கு எதிராகவே திரும்பும். எம் இனத்திற்கே கோடரிக் காம்பாய் அமையும் இவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்றுவதும் இவ்வமைப்பைச் சீர்குலைப்பதும் தவிர்க்க முடியாததே. எனவே அனைத்து முஸ்லிம் முற்போக்கு சக்திகளும் எம்முடன் இணைந்து இக் கோடரிக் காம்புகளை களைந்தெரிய உதவுமாறு கேட்டுக் கொள்கிருேம்.

மூதூரில்...

குலம், க. குணபாலன், வைரமுத்து, வ. குணசேகரம், ஞானமுத்து, செ. சித்திரவேல், சி. பத்துக்குட்டி, கோ. வீரக்குட்டி, இ செல்லத்துரை, ஆ. சுப்பிரமணியம், நா. சிறீகாந்தன், கோ. இராசநாயகம், வே. ஆறுமுகம், இ. குமார், க. நாகேந்திரன், செல்வி கந்தவனம், சி. குணநாயகம், அ. சத்தியசீலன், சி. கனகையா, த. தங்கராசா, அருளம்பலம், நா. சரஸ்வதி.

பூநகரி...

மூலமாகக் குருநகருக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களுடன் பாசையூரைச் சேர்ந்த அருள்நாயகம் (17) துப்பாக்கிச் சூட்டு காயத்துடன் வந்திருந்தார். குருநகரைச் சேர்ந்த மற்றுெரு மீனவரான குலேந்திரன் (25) என்பவர் இவர்களுடன் ஒன்ருக நின்று தப்பி ஓடுகையில் தங்களை விட்டுப் பிரிந்துவிட்டதாகவும் தெரிவித்தனர்.

ஹி ரீ ஐ...

கையளிக்கப்பட்டன.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேரில் கொழும்பு சென்று இப்பத்திரங்களை தம்முடன் எடுத்து வந்திருந்தார். இடம்பெயர்ந்த மாணவர்கள் தமது முன்னைய பகுதி தபாற்கந்தோரில் சென்று அனுமதிப் பத்திரங்களைப் பெறமுடியும்.

### முருகையனின் இரு நூல்கள் வெளியீடு

கவிஞர் இ. முருகையனின் "அது அவர்கள்" (கவிதைத் தொகுதி) 'வெறியாட்டு" (பாட்டுக் கூத்து) ஆகிய இரு நூல்களின் வெளியீடும், நாடக விமர்சனமும் நல்லூர் இந்து விடுதியில் இம் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டரை மணிக்கு தேசிய கலை இலக்கியப்பேரவை ஆதரவில் திரு. க. தனிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது. திருவாளர்கள் சோ. பத்மநாதன், என் இரவீந்திரன், ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

### 5 குழு அறிக்கை இன்று கையளிப்பு

இனப்பிரச்சினை தீர்வுதொடர்பான ஆலோசனைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஐந்து உப குழுக்களும் தமது பார்சுகளை இன்று காலைபத்து மணிக்கு சர்வகட்சிகளின் மாநாடு கூடும்போது சமர்ப்பிக்கும்.

கடந்த செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்ட இந்த ஐந்து குழுக்களும் இதுவரை நான்கு தடவைகள் கூடியுள்ளன. நேற்றுமாலைகூடியபோது இறுதி அறிக்கைகள் இக்குழுக்களினுல் தயாரிக்கப்பட்டன.

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி!

அன்ரனிப்பிள்ளை ஜெஸ்லி

17. 7. 85 — 17. 7. 86

மிருசுவில்

நாடுகாக்கவென்று, நம்மையெல்லாம் தவிக்கவிட்டு
ஓடிநீ மறைந்தவழி, ஓராண்டாய் ஓடிந்ததிங்கே!
ஏடு கொடுத்தவழி; எழில் எறிக்கும் என்றிருக்க,
எட்டிப்போயுனது, ஏட்டையே! மாற்றிவிட்டாய்!
கூடுகட்டி வாழவிட்டோம், குடைந்தவினை நாமறியோம்.

குடும்பக்குலவிளக்கே! நாம் கூவிப்புலம்புகின்ருேம்.
பாடும் பைங்கிளியே! பசுமைநிறை பேரழகே! நீ!
போராடப்போனவழி! பொல்லாங்காய்ப் போனதெங்கே?

அன்புள்ள
அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்,
ஆச்சி, மாமி, மச்சாள், மச்சான்மார்.

மிருசுவில்
17.7.86

R/24064

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 18-07-86 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22487